1987 ஏப்ரல் 9]

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பெரிய நகரங்களிலே ஸ்டேடியம் கட்டுகின்ற போது, நகரத்தினுடைய மையப் பகுதியிலே கட்டப்படாமல் ஊரின் ஒதுக்குப்புறத்திலே கட்டப்படுகிறது. உதாரணமாக, திருச்சியில் கட்டப்பட்ட விளையாட்டு அரங்கம் திருச்சி நகரத்தின் ஓரத்தில், ஒதுக்குப்புறத்திலே கட்டிய காரணத்தால் அந்த ஸ்டேடியம் பயனற்ற ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா? ஆகவே இனிமேல் கட்டப்படுகின்ற ஸ்டேடியங்கள் நகரத்தினுடைய மையப்பகுதியில் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும், நகரத்தின் மையப் பகுதியிலே இருக்கிற இடப்பிரச்சினையைப் பற்றி. முடிந்த அளவிற்கு நகரப் பகுதியிலே இருக்க வேண்டும் என்பதுதான் நல்லது என அரசு கருதுகிறது. இதை அரசு கருத்தில் கொள்ளும்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தொகுதி மாரியூரில் சாக்லெட் தொழிற்சாலை.

358—(* வினா எண். 4299) திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடித் தொகுதி மாரியூரில் 1979-ல் ஏற்பட இருந்த சாக்லெட் தொழிற்சாலை துவங்காமல் இருப்பதற்கான காரணம் என்ன?

(ஆ) எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கடலாடி தொகுதி மாரியூரில் தேர்ந்தெடுத்த நிலத்தை தமிழ்நாடு பனைப்பொருள் இணையத்திற்கு முழுமையாக மாற்றம் செய்ய சில காலம் ஆகும் என்று தெரிவதால், இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் அமைத்திட தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியமும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து இடம் தேர்வு செய்து அவ்விடத்தில் சாக்லெட் தொழிற்சாலை உட்பட பல்வகை பொருள்களை செய்யும் பனைப்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட கதர் வாரியம் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.